*ஆய்வுக்கட்டுரை இல: 69*

# கவிகாமு ஷெரீப் கவிதைகளில் காணப்படும் சமூகமேம்பாடுஷர் ஆய்வு

**MASF. Saadhiya[1] and M. Selvakumari[2]**
*[1&2] Department of Languages, South Eastern University of Sri Lanka.*
saadhiyas@gmail.com, selvakumari.selva@gmail.com

***ஆய்வுச் சுருக்கம்***

*தஞ்சை மாவட்டத்திலுள்ள அபிவிருத்தீஸ்வரம் எனும் ஊரில் 1914 இல் காதர்ஷாராவுத்தர், முகம்மது இபுறாஹீம் பாத்தும்மா ஆகியோருக்கு மகனாகக் கவிகா. மு. ஷெரீப் அவர்கள் பிறந்தார். இவர், பெரியாரது சுயமரியாதை இயக்கம் ,காங்கிரஸ் மகாசபை போன்ற இயக்கங்களுடன் தன்னை இணைத்துக் கொண்டதுடன் சமுதாய சீர்திருத்தவாதியாகவும் செயற்பட்டார். இந்திஎதிர்ப்பு, இந்திய சுதந்திரம், மன்னர் ஒழிப்பு, தமிழக எல்லைமீட்சி, நாடகவரிச்சட்ட நீக்கம் முதலிய பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதுடன் தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பயிற்சிமொழி,தமிழகப் பெயர் அமைப்பு,பாரதி பாடல்களை தேசியமயமாக்குதல் முதலியவற்றை செயற்படுத்துவதிலும், பல்வேறு தொழிலாளர் போராட்டங்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். சமூகப் பணிகள் பலவற்றினை மேற்கொண்டதுடன் சமூகநலன் நோக்கிய கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள், நாவல், குறுங்காவியம், கட்டுரைகள், என்பனவற்றினை வழங்கிதமிழ் மொழிவளர்ச்சிக்கும் பணிபுரிந்துள்ளார். அதாவது, எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், படைப்பிலக்கியவாதியாகவும் நின்று இவர் நல்கிய பணிகள் போற்றத்தக்கனவாகும். செய்குதம்பிப் பாவலர், அப்துல் கபூர், பாரதிதாசனார், நாமக்கல்லார், தேசிய விநாயகம்பிள்ளை, சுத்தானந்த பாரதியார், சா.து.யோகி ஆகியோரின், வழிவந்தவர்களில் இவரும் ஒருவராவார். இவர் தமிழ், தமிழ் நாட்டுஅரசு, பாரதநாடு, சமுதாயப் பார்வை, தொழிலாளர், இயற்கை, கலை, காதல், மழலைச் செல்வம், வாய்மைநெறி, தத்துவமான தகைமையாளர்கள், கவியரங்கக் கவிகள்,கவிதைக் கடிதங்கள், பன்மணித்திரள், இறைவழிச் சிந்தனை ஆகிய எண்ணக்கருக்களில் பல்வேறு தலைப்புக்களைக் கொண்ட கவிதைகளைப் படைத்து அக்கவிதைகளினூடே பலகோணங்களில் சமூகமேம்பாட்டுக்கான சிந்தனைகளை முன்வைத்துள்ளாார். கவிகா. மு. ஷெரீப் கவிதைகளின் மூலம் புலனாகும் சமூகமேம்பாட்டுச் சிந்தனைகளை வெளிக்கொண்டுவருவதனை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பாலும் இன,மத,சாதி ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகக் காணப்படுகின்ற ஒரு நாடாகும். இவ்வாறானதொரு நாட்டில் இலக்கியவாதிகள் பலரும் தமது இலக்கியங்களினூடே சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைவவதற்கு முயன்றுள்ளனர். அவ்வாறு முயன்றவர்களுள் கவிகா. மு. ஷெரீபும் ஒருவர். எனினும் இவரது கவிதைகள் பெருமளவில் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதே ஆய்வுப் பிரச்சினையாகும். கவிகா.மு.ஷெரீப் கவிதைகள் சமூகமேம்பாட்டை வலியுறுத்துகின்றன என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் சமூகவியல், ஒப்பீட்டு, விவரண ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவாக கவி கா.மு. ஷெரீப் கவிதைகளும், இரண்டாம் நிலைத் தரவாக இவ்வாய்வோடு தொடர்பான நூல்கள்,சஞ்சிகைகள்,கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எளிய மொழிநடையில் அமைந்த கவி.கா.மு. ஷெரீபின் கவிதைகள் பல்வேறு வகையிலும் சமூக மேம்பாட்டை மையப்படுத்தியே அமைந்துள்ளன. குறிப்பாக,சமூக நல்லிணக்கம், தொழிலாளர் நலன்,பெண் நலன்,கல்விச் சமத்துவம்,அரசியல் மேம்பாடு,குடும்ப நலமேம்பாடு, நற்பண்புகளை வளர்த்தல், தீயசெயல்களைக் களைதல் எனப் பல்வேறு விடயங்களையும் வெளிப்படுத்துவனவாக இவரது கவிதைகள் அமைந்துள்ளன.*

***திறவுச் சொற்கள்:****சமூகமேம்பாடு,சமஷ்டி,சமதர்மம்*

**அறிமுகம்**

தஞ்சை மாவட்டத்திலுள்ள அபிவிருத்தீஸ்வரம் எனும் ஊரில் 1914இல் காதர்ஷாராவுத்தர், முகம்மது இபுறாஹீம்பாத்தும்மா ஆகியோருக்கு மகனாகக் கவிகாமு ஷெரீப் அவர்கள் பிறந்தார். இவர், பெரியாரது சுயமரியாதை இயக்கம், காங்கிரஸ் மகாசபை போன்ற இயக்கங்களுடன் தன்னை இணைத்துக் கொண்டதுடன் சமுதாய சீர்திருத்தவாதியாகவும் செயற்பட்டார். இந்தி எதிர்ப்பு, இந்திய சுதந்திரம், மன்னர் ஒழிப்பு, தமிழக எல்லை மீட்சி, நாடக வரிச்சட்ட நீக்கம் முதலிய பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதுடன் தமிழ் ஆட்சி மொழி, தமிழ் பயிற்சி மொழி, தமிழகப் பெயர் அமைப்பு, பாரதி பாடல்களை தேசிய மயமாக்குதல் முதலியவற்றை செயற்படுத்துவதிலும், பல்வேறு தொழிலாளர் போராட்டங்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். சமூகப் பணிகள் பலவற்றினை மேற்கொண்டதுடன் சமூக நலன் நோக்கிய கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள், நாவல், குறுங்காவியம், கட்டுரைகள் என்பனவற்றினை வழங்கி தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பணிபுரிந்துள்ளார். அதாவது, எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், படைப்பிலக்கியவாதியாகவும் நின்று இவர் நல்கிய பணிகள் போற்றத்தக்கனவாகும். செய்கு தம்பிப் பாவலர், அப்துல் கபுர், பாரதிதாசனார், நாமக்கல்லார், தேசியவிநாயகம்பிள்ளை, சுத்தானந்தபாரதியார், சா.து.யோகி ஆகியோரின் வழிவந்தவர்களில் இவரும் ஒருவராவார். இவர் தமிழ், தமிழ் நாட்டு அரசு, பாரதநாடு, சமுதாயப் பார்வை, தொழிலாளர், இயற்கை, கலை, காதல், மழலைச் செல்வம், வாய்மை நெறி, தத்துவமான தகைமையாளர்கள், கவியரங்கக் கவிகள், கவிதைக் கடிதங்கள், பன்மணித்திரள், இறைவழிச் சிந்தனை ஆகிய எண்ணக்கருக்களில் பல்வேறு தலைப்புக்களைக் கொண்ட கவிதைகளைப் படைத்து அக்கவிதைகளினூடே பல கோணங்களில் சமூக மேம்பாட்டுக்கான சிந்தனைகளை முன்வைத்துள்ளார். கவிகாமு ஷெரீப் கவிதைகளின் மூலம் புலனாகும் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளை வெளிக்கொண்டு வருவதனை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது.

புதுமைபித்தன் ‘ஒரு நாள் கழிந்தது’ எனும் சிறுகதை மூலம் ஒரு எழுத்தாளன் ஒரு நாளைக் கழிப்பதற்கு எவ்வாறு போராடுகிறான் என்பதை புலப்படுத்தியிருப்பது போல் இவரும் ‘கவிஞன் குடும்பம்” எனும் கவிதை மூலம் அவரது வறுமையான வாழ்வின் அவலங்களை துல்லியமாக சித்திரித்துள்ளார். போராட்டமான வாழ்விலும் தனது எழுத்துப் பணியை கைவிடவில்லை என்பதனையும் இக்கவிதையில் சித்திரித்துள்ளார்.

‘‘கன்னல்மொழி பேசுகின்ற
மக்கள் கூடி
கண்பிசைந்து அழுகையிலே
ஏடெடுத்துப்
மண்ணுலகம் உய்வதற்கு
மார்க்கம் சொல்லி
மாத்தமிழில் கவிபாடிக்
களித்திருந்தேன்’’[1]

எனவரும் பகுதி இவ்வகையில் நோக்கத்தக்கது.

பாரத நாட்டின் மக்களிடையே காணப்படுகின்ற ஒற்றுமையை எடுத்துக் கூறுவதாக இப்பாடல்வரிகள் அமைந்துள்ளன. பொதுவாக, மக்களுடைய தோற்றம், மொழிகள், சமயம், கடவுளை வணங்கும் முறைகள் மனிதரிடையே காணப்படுகின்ற ஆற்றல்கள் எனப் பலவேறுபாடுகள் மக்களிடையே நிலவினாலும் மக்களின் உள்ளங்கள் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாக வாழ்வதை இவரது கவிதைகள் சித்திரிக்கின்றன.

பாரத மக்களிடையே காணப்படும் தளராத ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் பின்வரும் பாடலடி காணப்படுகின்றது.

“தேர்ந்த சக்தி ஆயிரம்
திரண்டு வந்த போதிலும்
நேர்ந்த எங்கள் ஒற்றுமை
நிலைத கர்தல் ஆகிடா (எங்கள்)
பாரதத்தைக் காப்பது
படைகள் அல்ல, ஒற்றுமை...”[2]

எங்கள் நாடு பாரதம் எனும் தலைப்பிலான கவிதையில், ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு ஒற்றுமையுள்ள ஒரு சமுதாயத்தை எவராலும் தோற்கடிக்க முடியாது என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பும் பாரத நாட்டில் மக்கள் மத்தியில் காணப்பட்ட வேற்றுமைகள் ஒழியவில்லை என்ற நிலைப்பாட்டினை இவரது கவிதைகளில் தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது. ‘புறப்படு வேலோடு’ என்ற கவிதையில்,

“பட்டதுபோதும் ஒற்றுமையின்றிப்
பாரதப்புத்திரனே
கிட்டிய சுதந்திரம் தன்னைக் காத்திடக்
கிளர்ந்துமுன் னேறிடடா
வீட்டிலேகட்சியை மதத்தை வைத்துநீ
வெளியிலே வந்திடடா....
பாட்டிலும் எழுத்திலும் பாரத வெற்றியைப்
பண்போ டமைத்திடடா
என்மொழி பாரதம் என்மதம் பாரதம்
என்றுநீ கூறிடடா....
துன்பம்வரினும் அயோரம் அஞ்ஞோம்
என்றுமே கூறிடடா...”[3]

சிறந்ததொரு ஆட்சி பாரத நாட்டில் ஏற்பட வேண்டுமென்ற ஆதங்கம் கவிஞரின் உள்ளத்தில் ஆளப்பதிந்திருந்ததை பின்வரும் பாடல்வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

“ஆயிரம் ஆண்டின் அடிமைத் தளையை
அறுத்தவர் நாமலவா
பேயிடம் நாட்டைக் கொடுத்திட நாமலாம்
பித்தர்கள் அல்லவடா
ஓயோம் எதிரியை ஓட்டும் வரையென
உறுதிநீ ”பூண்டிடா
தீயோன் எதிரியைத் தெருநாய் போன்றே
துரத்தி ஓட்டிடடா...”[4]

நிறம், இனம், மதம் போன்றவற்றால் மக்கள் தமக்குள் வேற்றுமையினை ஏற்படுத்தி பிளவுபடுவதனால் நாட்டில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனாலேயே பல்லாயிரம் கணக்கான உயிர்கள் பலிபோகின்றன. இவ்வாறான வேறுபாடுகளைத் தூண்டுவோருக்கெதிராக கவிஞர் தமது பாடல்களின் மூலம் குரல் எழுப்பியுள்ளார்.

“...நிறத்திமிர் போன்றே மதத்திமிர் கொடிது
நினைவில் நீகொளடா
இரத்த வெறியில் ஆடும் எதிரியின்
எலும்பை முரித்திடடா...”[5]

பாகிஸ்தானிய படையெடுப்பு நடந்த காலகட்டத்திலே 'புறப்படு வேலோடு' என்ற கவிதை எழுதப்பட்டது. இக்கவிதை முழுவதிலும் மக்களிடையே ஒற்றுமையினைத் தூண்டி எதிரிகளுக்கெதிராகப் போராடுவதற்கு அறைகூவல் விடுப்பதாகவே அமைந்துள்ளது. அதேவேளையில், 'சாடிடுவோம' எனும் கவிதையும் தேசப்பிரிவினையை எதிர்த்து 1941இல் இவரால் எழுதப்பட்டது.

முதலாளி, பாட்டாளி வர்க்க வேறுபாடுகளை மிக நுண்மையாக கவிதைகளினூடே புலப்படுத்தியுள்ளார்.
முதலாளி:

"கொழுத்த உணவினால் உடல்ப ருத்திடக
கொழுப்பைக் குறைத்திட மருந்துண்பான் ஆனால்
உழைத்த தொழிலாளி உடல் இளைத் திட்டாலும்
உதவிதான் செய்திட மனமிசையான்

பாட்டாளி:

"மனைவி மக்களை யெண்ணிச் - செக்கு
மாடெனவே தினம் உழைப்பான்- ஆனால்
கனவிலு மேசுகங் காணாது நோய்கொண்டு
காப்பாற்றி ஆளின்றிச் செத்திடுவான்…"[6]

இக்கவிதையில், வேதாந்தி, வியாபாரி, மதவாதி, முதலாளி, பாட்டாளி, சந்தர்ப்பவாதி என சமூகத்தில் உலாவிவரும் பாத்திரங்களை 'இன்றைய சமுதாயம' எனும் தலைப்பிலமைந்த கவிதையில் யதார்த்த பூர்வமாக சித்திரித்துக் காட்டியுள்ளார். 1948இல் இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியின் போது கள்ளுக்கடைகள்( மதுபானம்) ஒழிக்கப்பட்டன. இதன் போது கள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் நலன் பாதிக்கப்பட்டது. இவர்களின் நலன் கருதி கள்ளுத் தொழிலாளர் நலன் காத்திடும் இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கத்தினை ஆதரித்து எழுதப்பட்ட கவிதையே 'ஏழைக்கிரங்காரோா' எனும் கவிதையாகும். இதில் இத்தொழில் புரிந்த மக்கள் ஏழைகளாகக் காணப்பட்டதால் இக்கடைகள் மூட வேண்டும் என்ற சட்டம் கொண்டு வரப்பட்ட போது ஏழைத் தொழிலாளர்களின் உழைப்பு இல்லாது போய் பல்வேறு வகையிலும் அவர்கள் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால், அவர்கள் தமது குடும்பத்தோடு தெரு வழியே வேலைத் தேடி அலைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலைகளைக் கண்டித்தே இக்கவிதை எழுதப்பட்டது.

"…தெருவினில் மக்கள் மனைவியர் தம்மோடு
சென்று சென்றே வேலை தேடியழும்
பெரும்பெரும் கும்பலாம் கள்தொழி லாளரின்
பிழைப்பிற் கொருவழி சொல்லுமையா"[7]

ஜனநாயக சோசலிசத்தினை வலியுறுத்திப் பாடுவதாகவே பிணியின்மை, சுகவாழ்வு பெற முதலிய கவிதைகள் அமைந்துள்ளன. ஒரு கூட்டத்தினர் மாத்திரம் அனைத்துச் சுகபோகங்களையும் அனுபவித்து, ஏனையோர் துன்பத்தில் துவழ்வதனை கவிஞர் தமது கவிதைகளினூடே எதிர்த்துள்ளார்.
சமதர்மம் என்று வெறும் வார்த்தைகளைக் கூறிக் கொண்டு அதற்கெதிராக பல்வேறு வகையிலும் செயற்படுபவர்களை 'மடமை வீழ அடிகொடு' என்ற கவிதையில் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

மேலும், உழைப்புச் சுரண்டலுக்கெதிராகவும் இவர் பாடியுள்ளார்.

''…உழைப்பவரை ஏய்த்துவாழும்
உலுத்தர்சாக அடிகொடு…''[8]

எனவரும் பாடலடிகள் இவ்வகையில் நோக்கத்தக்கது. சமூகத்தில் நடமாடும் போலிகளை இனங்கண்டு சாட்டையடி கொடுப்பது போலவே மடமை வீழ அடி கொடு என்ற கவிதை அமைந்துள்ளது.

அடிநிலை மக்களின் அவல வாழ்வை செல்வந்தர்களின் வாழ்வோடு ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலம் அடிநிலை மக்கள் பற்றிய ஆழ்ந்த மனிதாபிமானத்தை மக்கள் மத்தியில் 'சுதந்திரம் வந்தததது ஆனால்..' எனும் கவிதையினூடே எடுத்துக் காட்டியுள்ளார்.

''மாடிமீது மாடி கட்டி
வாழ் றார்க ளேசிலர்
வீடு இன்றி வீதி யோரம்
ஏங்குறார்களே பலர்…

…குப்பை மீது சோற்றை வீணில்
கொட்டு றார்க ளேசிலர்
குப்பை சேர்ந்த சோறு மின்றிச்
சோறு றார்க ளேசிலர்''[9]

மனிதர்கள் எங்கிருந்தாலும் பல்வேறு வகையான பிரச்சினைகளும் அங்கு காணப்படும் என்பதனை யதார்த்த பூர்வமாக 'காலக் கவிதை' எனும் கவிதையில் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

''அம்புலிக்கு உனையழைத்துப்
போகப்போறேன் பெண்ணே அங்கும்
ஆடையில்லாச் சினிமாப்படம்
இருக்குமோடா கண்ணா…''[10]

ஆண், பெண் உரையாடல் பாணியில் இக்கவிதை அமைந்துள்ளது.

சமூகத்தில் இன்று 'குடும்பநலத்திட்டம்' பரவலாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. கவிஞரின் கருத்தும் இதற்கு ஆதரவாகவே காணப்படுகின்றது. அதிகமான குழந்தைப் பேறு குடும்ப நலத்தைப் பாதிக்கிற விடயமாகவே கவிஞர் கருதியுள்ளார். அதனால், குறைந்த எண்ணிக்கையில் குழந்தைகள் வாழ்கின்ற குடும்பங்கள் எல்லா வகையான சுகபோகங்களையும் அனுபவித்து வாழலாம் என்ற கருத்து இவரது 'குடும்ப நலத்திட்டம்' என்ற கவிதையில் தொனிக்கிறது.

''…. ஓய்வில்லாமே பிரசவிச்சா
உடம்புதாங்குமா?- குழந்தை
ஒண்ணுரெண்டைத் தாண்டிப் பிட்டா
குடும்பம் வாழுமா? - பெத்த
தாய்நலத்தை நாடினாலும்
குறையப்பெக்கணும்- குழந்தை
சந்தோஷமாய் வாழ்வதற்கும்

குறையப்பிறக்கணும் - இதற்கு...”[11]

அடிநிலை மக்களது வாழ்வு உயர்வு பெற வேண்டும் என்ற கவிஞரின் ஆதங்கம் ‘வாழ்த்துக் கூறுவோம்’ எனும் கவிதையில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

உழைப்பவரை வாழ்த்தி, ‘வாழ்த்துக் கூறுவோம்’ எனும் கவிதையைப் பாடியுள்ளார். இக்கவிதையில் நாடு செழிக்க உதவுவோர் தொழிலாளர்கள். எனவே, அவர்களின் வாழ்வு உயர வேண்டும் என்ற கவிஞரின் ஆதங்கம் கவிதை முழுவதும் தொனிப்பதை அவதானிக்க முடிகிறது. அதே வேளை , ‘தொழிலாளர் குரல்’ என்ற கவிதை மூலம் தொழிலாளர் குரல் கொடுப்பது போல் தமது உள்ளக்கிடக்கையை புலப்படுத்தியுள்ளார்.

“வானோங்கி நிற்குதுபார் தோழா
வண்ணமா மாளிகைகள்
ஏனோநாம் தங்குதற்குத் தோழா
ஏற்ற குடிசையில்லை...”[12]

மேலும், இக்கவிதையின் இறுதி அடிகள் மூலம் பாட்டாளி வர்க்கம் உயர வேண்டும் எனில், அவர்கள் போராட வேண்டும் எனக் கூறி , தூங்கிக் கிடக்கும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு விழிப்புணர்வினை ஊட்டுகிறார். தொழிலாளர் உழைப்பு சுரண்டப்படுவதனால் அவர்கள் எப்போதும் ஏழைகளாகவே காணப்படுகின்றனர். அவர்களது இந்நிலைக்குக் கடவுள் தான் காரணமெனக் கூறிக்கொள்வோரை இவர் வன்மையாகக் கண்டிக்கிறார். உழைப்போர் உயர வேண்டும், உழைப்பாளரை சுரண்டி வாழ்வோர் நிலை இல்லாது ஒழிய வேண்டும் . அதன் மூலம் புதிய உலகம் மலர வேண்டும் என்ற அவா ‘உடன் எழுவீர்’ எனும் கவிதை முழுவதும் இழையோடியிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

சமதர்மம் நிலவ வேண்டும் என்ற குரல் ‘கைகொடுப்போம்’ எனும் கவிதையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

“உடலும் உயிர்வாடத் தினமும் உழைப்பாலே
உலகம் தழைத்தோங்கச் செய்வோர் -தம்
குடலும் பசிகிள்ளக் குழந்தை மனையாளும்
குந்தி யமும்படிக்குச் செய்தே- நல்
நிலையில் வயிற்சாலாய் நித்தம் பொருள் சேர்க்கும்
நீச்சர் தமைமாய்த்துச் சமமாய் - வல்
லுலகப் பொதுஆட்சி ஒன்று கண்டிங்கே
உண்மைத் தழைத்தோங்கச் செய்வோம் பார்”[13]

இந்தியாவில் நிலவி வந்த பண்ணை அடிமை முறையை மக்களுக்குப் புலப்படுத்தும் வகையில் ‘தொத்தப்பசு’ எனும் தலைப்பில் ஒரு கவிதையை எழுதியுள்ளார். பண்ணைகளில் வேலை செய்யும் ஏழை விவசாயக் கூலிகளின் நிலை , அவர்களது மன ஆதங்கம் என்பன மிக ஆழமாக இக்கவிதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் சுயநலமிக்கவராக வாழும் போது தான் சமூகத்தில் பல்வேறு சீர்கேடுகளும் , பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. பொது நலம் பேணும் போது சமூகம் சீர்பெற்று நன்னிலை அடையும். எச்சந்தர்ப்பத்திலும் மனிதன் புகழுடன் வாழ வேண்டும் எனில், மனிதன் மனிதத்

தன்மைகளோடு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், வாழும் முறை செம்மை, அறம் வளர்க, மனிதா கேள், சிந்தனை செய்வீர் முதலிய கவிதைகளைப் படைத்துள்ளார்.

''...பணமெனும் மமதையால்
பழிபல புரிந்து,
பண்பிலா மனிதனாய்
நடப்பதி லிருந்து,
தினம்தினம் விலகியே
சீர்பெற்றுத் திகழ்ந்து,
செய்தொழில் அனைத்திலும்
பொதுநலம் மிகுந்து''[14] (புகழுடன்)

மேலும், ஏழைகளுக்கு உதவும் மனப்பான்மையை மக்களிடம் வலியுறுத்துவதாக பின்வரும் பாடல் பகுதி அமைந்துள்ளது.

''...எரியுற்ற தணலெனப்
பசிமுற்றிக் குடலை
இம்சிக்கத் துயருற்றே
ஏங்கியே அலையும் (வறியோர்)
பண்பாலே கையேந்திக்
கேட்டிட மறுத்துப்
பசியோடே தெருவினில்
அலைவோரை அழைத்து,
தெம்" ட்டிப் பசியாற்றித்
துன்பத்தைத் துடைத்து
சிறப்புற்று வாழ்ந்திடச்
செய்வாய்நீ தனித்து''[15] (வறியோர்)

அதே வேளை, மற்றுமொரு பாடலிலும் இக்கருத்தினைப் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்.

''பொருளால் வருவது
இன்பமல்ல மாதர்
போகத்தால் வருவது
சுகமுமல்ல நல்ல
அருளால் ஏழையர்
இன்னல் தவிர்ந்திட
ஆற்றிடும் தொண்டுதான்
சிறந்ததடா....
புலமையும் பொருள்களும்
பயனற்றதே தொண்டு
புரிபவர்கள் வாழ்வுதான்
உயர்வுற்றதே''[16] (இன்பமும்)

நட்பின் மேன்மை , சினம் , பகை முதலியவற்றால் ஏற்படும் கேடு முதலியன பற்றியும் பல குரல் வெண்பாக்களை அமைத்துள்ளார். இவரது சமூக மேம்பாட்டுக்கான அடித்தளத்தை 'கவியின் கனவு' என்ற கவிதை பறை சாற்றி நிற்கின்றது. இக்கவிதையில் இவர் சமதர்ம சிந்தனையினை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார்.

''ஒன்றே உலகென என்றும் நெஞ்சிலே
எண்ணிச் சேர்ந்திடுவோம் - பகை

இன்றி நேசமாய் ஒன்றி யாவரும்
அன்பாய் வாழ்ந்திடுவோம்

உழைப்பால் உயர்வின்றிச் பிறப்பால் உயர்வெனும்
எண்ணத்தை மாய்த்திடுவோம் என்றும்

உழைக்கா திருந்திட நினைக்கும் மனிதன்
வெறுத்தே ஒதுக்கிடுவோம்"[17]

எனவரும் கவிதைப் பகுதி இவ்வகையில் நோக்கத்தக்கது.

எளிய மொழி நடையில் அமைந்துள்ள கவிகாமு ஷெரீபின் கவிதைகள் பல்வேறு வகையிலும் சமூகமேம்பாட்டைமையப்படுத்தியே அமைந்துள்ளன. குறிப்பாக, சமூகநல்லிணக்கம், தொழிலாளர் நலன், பெண் நலன், கல்விச் சமத்துவம், அரசியல் மேம்பாடு, குடும்பநலமேம்பாடு, நற்பண்புகளை வளர்த்தல், தீயசெயல்களைக் களைதல் எனப் பல்வேறு விடயங்களையும் வெளிப்படுத்துவனவாக இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

**திறவுச் சொற்கள்:**
சமூகமேம்பாடு, சமஷ்டி, சமதர்மம்.

**அடிக்குறிப்புகள்:**

1. ஷெரீப், காமு., (1990), கவி காமு ஷெரீப் கவிதைகள், ப.86
2. மேலது,ப.40
3. மேலது,பக்.45 - 46
4. மேலது,ப.46
5. மேலது,ப.46
6. மேலது,ப.56
7. மேலது,ப.66
8. மேலது,ப.73
9. மேலது,ப.75
10. மேலது,ப.77
11. மேலது,ப.79
12. மேலது,ப.95
13. மேலது,ப.102
14. மேலது,ப.251
15. மேலது,ப.254
16. மேலது,ப.257
17. மேலது,ப.266

**உசாத்துணை நூல்கள்**:


1. கவிகாமு ஷெரீப், 1990,**கவிகாமு ஷெரீப் கவிதைகள்,** தமிழ் முழக்கம் பதிப்பகம், சென்னை.
2. **கழகத் தமிழ் அகராதி,** (2004),கழகப் புலவர் குழு,கழக வெளியீடு..
3. **க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,** தமிழ் - தமிழ் - ஆங்கிலம், (2006), சென்னை.